# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## STC.No.45/2016

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–07, திரு.தமிழரசன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச்சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தமிழரசன் | வயது | : | 64/26 |
| த.பெ/ க.பெ. | : | பாவாடைசாமி | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் ஓய்வு |
| ஊர் | : | ஆண்டிமடம் | நிலை | : | LW10 / PW07 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

1)நான் இறுதியாக மீன்சுருட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 14.11.2015ம் தேதி நான் ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலனைப்பெற்று, திருச்சி காவேரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த தேவதாசன் என்பவர் பேச முடியாத நிலையில் இருந்ததால், அவருக்கு துணையாக இருந்த அவரது மாமனார் கலியபெருமாள்

என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலைய குற்ற எண் 646/2015, ச/பி.279, 337 இதசவின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருள்கண்ணன், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் அதசாஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அதசாஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

4) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 17.11.2015 ம் தேதி கைது செய்து, நிலையம்கொண்டு வந்து, காவல் நிலைய பிணையில் விடுவித்தேன்.

5) ஆனந்தகுமார் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சிவமணி என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர் கொடுத்த காயச்சான்றிதழ் பெற்றேன். **காவேரி தனியார் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) மருத்துவர் ஆனந்தகுமார் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் இவ்வழக்கின் ச/பி.279, 337 இதசவிலிருந்து ச/பி.279, 338 ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்துள்ளேன். **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7) இவ்விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 61 E 4585 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தை 16.12.2015 ம் தேதியும், மற்றொரு வாகனமான TN 61 E 4613 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தை 17.12.2015 ம் தேதி மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி

மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சரவணபவன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். **N 61 E 4585 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகவும், TN 61 E 4613 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

8) பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து, 31.12.2015 ம் தேதி எதிரியின் மீது ச/பி.279, 338 இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரியின் தரப்பில் கு/வி.**

1) புகாரை 4 நாட்கள் காலதாமதமாகத்தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.2 காவேரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) அ.சா.1 மற்றும் அ.சா.2 என் விசாரணையில் விபத்து ஏற்பட்ட இடம் வாரியங்காவல் விஏஓ வீட்டின் எதிர்புறம் நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் விஏஓ வீட்டின் எதிரில் மெயின் ரோட்டில் நடந்ததாக சொல்லியுள்ளார்கள். அசா.2 எனது விசாரணையில் சாலையின் இடதுபுற ஓரமாக சென்றுக்கொண்டிருந்தபோது, விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.4 எனது விசாரணையில், அ.சா 2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தான் சாலையில் சென்றுக்கொண்டிருந்தபோது, செல்வராசு வீட்டிற்கும் சிமெண்ட் பேக்டரிக்கும் இடையே தன்னை

ஓவர்டேக் பண்ணிவிட்டு போகும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை.

3) இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிந்து, இறுதியறிக்கை தாக்கல் செய்தது நான்தான் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் விபத்திற்கு ஆஜர் எதிரி காரணமில்லை என்றாலும், அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்தை நான் சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவ இடத்திற்கு செல்லாமலும் புலன் விசாரணை மேற்கொண்டு, தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.